0416-2290848
9499055676
Email ID: veliti510@yahoo.co.in

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

அனுப்புநர்
C.அமர்நாத், B.E.,
துணை இயக்குநர் (முதல்வர்)(பொ)
அரசினர் தொழிற் பயிற்சி நிலையம்
வேலூர் - 632010.

பெறுநர்
மாவட்ட முதன்மை கல்வி அலுவலர்
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்
வேலூர் - 632 009.

நக.எண் : 1050/சே/2024 நாள்: 20/05/2025

2332

ஐயா / அம்மையீர்,

பொருள் : பயிற்சி - 2025-ஆம் ஆண்டு சேர்க்கை - மாணவர்களின் மாற்றுசான்றிதழ் வழங்குவதில் தாமதம் - இடைநின்ற மாணவர்களின் விவரம் கோருதல் - தொடர்பாக.

பார்வை : இயக்குநர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை, கிண்டி, சென்னை-32 அவர்களின் குறிப்பாணை எண்: 1795/கைப1/2025, நாள் :12.05.2025

பெறப்பட்டது 26 MAY 2025

பார்வையில் காணும் இயக்குநர் அவர்களின் குறிப்பாணையின்படி இத்தொழிற் பயிற்சி நிலையத்தில் 2025-ஆம் ஆண்டுக்கான பயிற்சியாளர்களின் சேர்க்கைக்கு விண்ணப்பங்கள் ஆன்லைன் மூலமாக www.skilltraining.tn.gov.in பதிவேற்றம் செய்யப்பட்டு 500 பயிற்சியாளர்களை சேர்த்திட நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தங்கள் கட்டுப்பாட்டில் உள்ள பள்ளிகளில் 9ஆம், 10ஆம், 11ஆம் வகுப்புகளில் இடைநின்ற மாணவர்களின் விவரத்தினை வழங்கினால் மாணவர்களை நேரிடையாக அணுகி தொழிற் பயிற்சி நிலையத்தில் விண்ணப்பிக்க வழிவகை செய்ய ஏதுவாக அமையும்.

இடைநின்ற மாணவர்களின் விவரம் வழங்கிட ஆவன செய்திடுமாறும் மற்றும் இப்பயிற்சி நிலையத்தில் அனைத்து மாணவர்களுக்கும் தரமான கல்வி, 4.0 டெக்னாலஜியுடன் கூடிய உயர்கல்வி மற்றும் அனைத்து மாணவர்களுக்கும் மாதம் ரூ.1750/- உதவித்தொகை, 2 செட் சீருடை, காலணி, Bus pass, பாடப்புத்தகம் அனைத்தும் இலவசமாக கொடுத்து பயிற்சி வழங்கப்பட்டு வருகின்றது.

ஆகையால் அனைத்து 10-ம் வகுப்பு மற்றும் 12ம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மாணவர்களும் இப்பயிற்சி நிலையத்தில் சேர்ந்து பயனடைய ஆவன செய்யுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

துணை இயக்குநர் / முதல்வர்
அரசினர் தொழிற்பயிற்சி நிலையம்
வேலூர் - 632 010.
20/5/25

நகல்

1.அனைத்து மாவட்ட கல்வி அலுவலர்கள்
வேலூர்
2.மாவட்ட ஆதிதிராவிடர் நலத்துறை அலுவலர்
வேலூர்

} 10 ம் வகுப்பு, 12 ம் வகுப்பு மாணவர்கள் தொழிற்கல்வியில் சேர அறிவுறுத்தி நடவடிக்கை எடுக்கும் பொருட்டு அனுப்பப்படுகிறது.